பக்கங்கள்: 06
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2052 தை 23 வியாழக்கிழமை 04.02.2021 கதிர் 322

# தமிழ்பேசும் சமூகத்தைப் பிரித்து ஆளுகின்ற பேரினவாதத்துக்கு ஓரணியில் தக்க பதிலடி!

## காத்தான்குடியில் சுமந்திரன் எம்.பி. சூளுரை



எண்ணிக்கையில் குறைவான தமிழ்பேசும் சமூகத்தைச் சிங்களப் பேரினவாதம் பிரித்து ஆளுகின்றது. இதற்கு நாம் அனைவரும் ஓரணியில் திரண்டு தக்க பதிலடி கொடுக்க வேண்டும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான நீதிக்கான பேரணி இன்று பகல் காத்தான்குடியை வந்தடைந்தபோது அங்கு பெருமளவில் திரண்டிருந்த முஸ்லிம்

2

## மியன்மாரில் இராணுவச் சதிப்புரட்சி: தேர்தல்கள் ஆணைக்குழு அதிருப்தி!

### கைதான அதிகாரிகளை உடன் விடுவிக்குமாறும் வலியுறுத்து



சட்டம் தங்களுக்கு வழங்கிய சட்டப்பூர்வமான கடமையை முன்னெடுத்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் மியன்மாரில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளமை துரதிர்ஷ்டவசமானது என இலங்கையின் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இலங்கையின் தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் நிமால் புஞ்சிவேவ வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மியன்மாரில் இடம்பெற்ற இராணுவச் சதிப்புரட்சி தொடர்பாக கடும்

2







# தமிழர் தலைநகர் திருமலையில் கால்பதித்தது நீதிக்கான பேரணி

## தொடர்கின்றது வெற்றிப் பயணம்; முஸ்லிம்கள் இன்றும் அமோக ஆதரவு; இரு சமூகத்தையும் ஒன்றிணைக்கும் பிள்ளையார் சுழி என்கிறார் அமீர் அலி

(ந.லோகதயாளன்)

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான நீதிக்கான பேரணி இரண்டாம் நாளான இன்று பெருமளவிலான தமிழ்பேசும் மக்களின் நேரடி ஆதரவுடன் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றது.

தமிழ்பேசும் மக்கள் மீதான அரச அடக்குமுறைகளுக்கு எதிராகவும், சர்வதேசத்திடம் நீதி கோரியும் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான தொடர் போராட்டத்தின் இரண்டாவது நாள் பேரணி இன்று காலை மட்டக்களப்பு தாழங்குடா தேவாலயத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டது.

2

## யாழ். பல்கலையில் சுதந்திர தினத்தை கரிநாளாகப் பிரகடனப்படுத்தி பதாகை



இலங்கையின் சுதந்திர தினத்தை கரிநாளாகப் பிரகடனப்படுத்தி யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இன்று பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்கு மக்களின் வாழ்வுரிமையையும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கேட்டும் நாட்டின் 73ஆவது சுதந்திர நாளான இன்று கரிநாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டு பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

2

# நான் சிங்கள - பௌத்த தலைவன்; இதைக்கூற ஒருபோதும் தயங்கேன்

## பௌத்தத்தின் அடிப்படையிலேயே நாட்டை ஆள்வேன் என்று கோட்டாபய திமிர்ப் பேச்சு



நான் இந்த நாட்டின் சிங்கள - பௌத்த தலைவன். இதனைக் கூற நான் ஒருபோதும் தயங்க மாட்டேன். பௌத்த சித்தாந்தங்களுக்கு அமையவே நாட்டை ஆள்வேன்.

- இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கையின் 73ஆவது சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொண்டு, நாட்டு மக்களுக்கு உரையாற்றும்போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் அனைத்து இன மற்றும் மதக் குழுக்களுக்கும் உரிய இடத்தை வழங்கும், அஹிம்சைவாத பௌத்த வழிகாட்டல்களின் கீழ், நடைமுறையில் உள்ள சட்டதிட்டங்களுக்கு அமைவாக அனைவரும் சமமாக வாழும் உரிமை உண்டு.

2

## கோட்டா – மஹிந்த தலைமையில் 73 ஆவது சுதந்திர தின நிகழ்வு

### 1,800 பிரமுகர்கள் பங்கேற்பு



இலங்கையின் 73ஆவது சுதந்திர தின தேசிய நிகழ்வு

இன்று காலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் தலைமையில் கொழும்பு சுதந்திர சதுக்க வளாகத்தில் நடைபெற்றது.

'சுபீட்சமான எதிர்காலம் - சௌபாக்கியமான தாய் நாடு' எனும்

2

## சிங்கள - பௌத்த இராஜ்ஜியமே கோட்டாவின் பிரதான இலக்கு!

### கௌதம புத்தரையும் துணைக்கு அழைத்துள்ளார் என மனோ சாடல்



இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தான், இலங்கையை அல்ல, சிங்கள பௌத்த இராஜ்ஜியத்தையே கட்டியெழுப்பப் புறப்பட்டுள்ளார் எனத் தெளிவுபடக் கூறிவிட்டார். இதற்காக அவர், கௌதம புத்தரையும் துணைக்கு அழைத்துத்தன்னை நியாயப்படுத்தியுள்ளார்.

2

## 146 கைதிகளுக்கு கோட்டா மன்னிப்பு

### அரசியல் கைதிகள் எவருமில்லை

இலங்கையின் 73 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இன்று 146 சிறைக் கைதிகளுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மன்னிப்பு வழங்கியுள்ளார்.

சிறைச்சாலைகள் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் தமிழ் அரசியல் கைதிகள் எவரும் அல்லர் என்பது குறிப்பிடத்தக்கது.

2

## நான் சிங்கள - பௌத்த தலைவன்; ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இலங்கைக்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ளப் போராடிய சுதந்திரத் தலைவர்களுக்கும், நாட்டை பயங்கரவாதத்தில் இருந்து மீட்டெடுக்க உயிர்த் தியாகம் செய்த இராணுவத்தினருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, இனங்களுக்கிடையிலான நல்லுறவை மேம்படுத்தி, வறுமையை ஒழித்து, பலமான பொருளாதாரமொன்றைக் கட்டியெழுப்பும் சவால் எம்முன்னே இருக்கின்றது.

நாட்டில் பலவீனமாக இருந்த தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தி, தாய் நாடு முகங்கொடுத்துள்ள சவால்களை வெற்றி கொள்ளவே, 69 லட்சம் பேர் எனக்கு வாக்களித்து, என்னைத் தலைவராகத் தெரிவுசெய்துகொண்டனர் - என்றார்.

## 146 கைதிகளுக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சிறைச்சாலைகளில் நன்னடத்தையுடன் இருந்த 146 கைதிகளுக்கு நான்கு நிபந்தனைகளின் கீழ் இவ்வாறு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கியுள்ளார் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

65 வயதுக்கு மேற்பட்ட கைதிகளில் தமது தண்டனைக் காலத்தின் அரைவாசியைப் பூர்த்தி செய்தவர்கள், 50 வயதுக்கு மேற்பட்டவர்களில் 25 வருடத்தைப் பூர்த்தி செய்தவர்கள், அரைவாசி தண்டனைக் காலத்தைப் பூர்த்தி செய்த இளம் கைதிகள் மற்றும் தண்டப் பணத்தைச் செலுத்த முடியாமல் உள்ளவர்களில் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கே இன்று ஜனாதிபதி மன்னிப்பு வழங்கியுள்ளார்.

## சிங்கள - பௌத்த .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜனாதிபதி கோட்டாபயவின் இன்றைய சுதந்திர தின உரையின் பிரதான சாராம்சத்தைக் கேட்டுப் பார்த்தால் இது தெளிவாகப் புரிகின்றது. தேடிப் பார்த்ததில் அவரது சிந்தனையில் உள்ள நான்கு முத்தான விடயங்களைத் தனது உரையில் அவர் உதிர்த்துள்ளார் எனத் தெரியவருகின்றது.

நாம் பல இன, மொழி, மத மக்கள் சகவாழ்வு வாழும் சுபீட்சமான இலங்கை இராச்சியத்தைக் கட்டியெழுப்ப முயல்கின்றோம். ஜனாதிபதி, தான் இலங்கையை அல்ல, சிங்கள பௌத்த இராச்சியத்தையே தான் கட்டியெழுப்பப் புறப்பட்டுள்ளார் எனத் தெளிவுபடக் கூறிவிட்டார்.

உண்மையில் தனது இலக்கை, ஒளிவு மறைவு இல்லாமல் தெளிவாக, உள்ளதை உள்ளபடி கூறியமையையிட்டு நான் ஜனாதிபதியைப் பாராட்டுகின்றேன். அவரது இலக்கை நாம் ஏற்க மறுக்கின்றோம் என்பது வேறு விடயம். ஆனால், அவர் ஒளிந்து விளையாடவில்லை அல்லவா?

உலகத்துக்கு ஜனாதிபதி ஏதோ சொல்ல வருகின்றார். அது என்ன எனக் குழப்பிக் கொள்ள வேண்டாம். அவர் பின்வரும் நான்கு கருத்துகளைத்தான் தெளிவாகக் கூறுகின்றார்.

முதலாவது நீங்கள் தேடிய தலைவன் நான்தான். இரண்டாவது நான் ஒரு சிங்கள பௌத்த தலைவன். இதைச் சொல்ல நான் ஒருபோதும் தயங்கப் போவதில்லை. மூன்றாவது பௌத்த படிப்பினைகளின் அடிப்படைகளிலேயே நான் இந்நாட்டை ஆளுவேன். நான்காவது நாட்டின் சட்ட வரையறைக்குள் எல்லா இன, மதத்தவருக்கும், சுதந்திரமும், சமத்துவமும் பெற்று சமாதான சகவாழ்வு வாழ பௌத்த தத்துவத்துக்குள்ளே உரிமையுண்டு. - என்றுள்ளது.

## கோட்டா - மஹிந்த ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொனிப்பொருளில் சுதந்திர தின நிகழ்வு இடம்பெற்றது.

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் நிலைமைக்கு மத்தியில் இம்முறை சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களைப் பின்பற்றியே, சுதந்திர தின நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஆளுநர்கள், அரச அதிகாரிகள், வெளிநாட்டுத் தூதுவர்கள், இராஜதந்திரிகள் என 1,800 பிரமுகர்கள் பங்கேற்றனர்.

## யாழ். பல்கலையில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொலிஸாரின் தடைகளை மீறியும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் நிலையில், யாழ்.பல்கலைக்கழகத்திலும் பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

## தமிழர் தலைநகர் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்தப் பேரணி நேற்று அம்பாறை மாவட்டத்தையும், இன்று காலை முதல் பகல் வரை மட்டக்களப்பு மாவட்டத்தையும் வெற்றிகரமாகக் கடந்து மாலை தமிழர் தலைநகரான திருகோணமலை மாவட்டத்தில் கால் பதித்துள்ளது.

வடக்கு-கிழக்குசிவில் அமைப்புக்கள், பொது அமைப்புக்கள், தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் முஸ்லிம் தேசிய கட்சிகள் என்பவற்றின் ஒன்றிணைந்த ஏற்பாட்டில் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினரின் தடைகளைத் தாண்டி இந்தத் தொடர் போராட்டப் பேரணி வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றது.

இரண்டாவது நாளான இன்று தமிழ், முஸ்லிம் மக்கள் தாமாகவே முன்வந்து பேரணியில் இணைந்துகொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் காத்தான்குடி மற்றும் ஓட்டமாவடி பிரதேசங்களில் முஸ்லிம் மக்களும், முஸ்லிம் அரசியல்வாதிகளும் பெருமளவில் திரண்டு நீதிக்கான பேரணிக்கு ஆதரவு வழங்கினர்.

இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்து 73 ஆண்டுகளாகியும் தமிழ், முஸ்லிம் மக்கள் சுதந்திரத்தை அனுபவிக்கவில்லை. ஜனாஸாக்கள் எரிக்கப்படுவது உடன் நிறுத்தப்பட வேண்டும். வடக்கு, கிழக்கு தமிழ்பேசும் மக்களுக்கு அரசால் நடந்த அநீதிகளுக்கு நீதி வேண்டும் என்று அவர்கள் விண்ணதிரக் கோஷங்களை எழுப்பினர்.

இருசமூகத்தையும் ஒன்றிணைக்கும் பிள்ளையார் சுழிதான் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணி என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் முக்கியஸ்தரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான அமீர் அலி தெரிவித்தார்.

பேரணி இன்று பகல் ஓட்டமாவடியை வந்தடைந்தபோது அங்கு அவர் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்பேசும் மக்களுக்கான நீதி கோரிய பயணத்தில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் முஸ்லிம் சமூகத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த பயணம் எதிர்காலத்தில் ஒற்றுமைப்பட்ட பயணமாக இருக்க வேண்டும். இந்தப் பயணத்தில் தமிழ்த் தலைவர்கள் மீது முஸ்லிம் தலைவர்கள் நம்பிக்கை வைக்க வேண்டிய காலகட்டம் வந்துள்ளது.

இருசமூகத்தையும் ஒன்றிணைக்கும் பிள்ளையார் சுழிதான் இந்த நிகழ்ச்சி நிரல். சிறுபான்மை சமூகத்தை தமிழர்கள், முஸ்லிம்கள் என்று வேறுபடுத்தும் ஆட்சியாளர்களுக்குத் துல்லியமாகப் பதில் சொல்ல வேண்டியுள்ளது.

தமிழ்பேசும் மக்களை இந்த வீதியில் இறங்கிப் போராட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளியவர்கள் ஆட்சியாளர்களே. அவர்களது சட்ட திட்டங்கள் காட்டு தர்பார். - என்றார்.

## தமிழ்பேசும் சமூகத்தை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மக்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாங்களும் தமிழ் பேசுகின்ற இஸ்லாமியர்களும் இந்த நாட்டு மக்கள். நாங்கள் இந்த நாட்டின் எண்ணிக்கையில் குறைவானவர்களாக இருக்கின்ற ஒரே காரணத்துக்காக எங்களை ஆட்சியாளர்கள் சிறுபான்மையினர் என நினைக்கின்றார்கள். அதுமட்டுமன்றி பேரினவாதத்தை மேலோங்கச்செய்து தாங்கள் நினைத்தபடி 73 வருடங்களாக அவர்கள் ஆட்சி செய்திருக்கின்றார்கள்.

அப்படி செய்கின்றபோது எண்ணிக்கையில் குறைவாக இருக்கின்ற தமிழ் பேசும் சமூகத்தைப் பிரித்து ஆளுகின்றார்கள். அப்படி இனி நடக்கக் கூடாது .

தமிழ் பேசும் சமூங்களாக வடக்கு - கிழக்கைத் தாயமாகக் கொண்ட தமிழ் மக்களும், வடக்கு - கிழக்கிலும் வெளியேயும் வாழ்கின்ற இஸ்லாமிய மக்களும், மலையகத்தில் வாழுகின்ற எமது தமிழ் உறவுகளும் ஒன்றாக எழுந்து நிற்க வேண்டும். ஓரணியில் பயணிக்க வேண்டும். இந்த நடை பயணம் அதற்கு ஓர் ஆரம்பமாக இருக்கின்றது.

இஸ்லாமிய சகோதரர்கள் செறிந்து வாழ்கின்ற காத்தான்குடியில் நீங்கள் திரளாக வந்து ஆதரவளித்தமைக்காக உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த எல்லையோடு உங்களுடைய ஆதரவு இருந்துவிடக்கூடாது. தொடர்ச்சியாகப் பொலிகண்டி வரைக்கும் நீங்கள் எம்முடன் வர வேண்டும்.

ஜனாஸா எரிப்புக்கு எதிராக நாங்கள் எப்படிக் குரல் கொடுக்கின்றோமோ அதே போல் தமிழ் மக்களுடைய எல்லா அரசியல் உரிமைகளும் மீறப்படுவதற்கு எதிராக நீங்களும் சேர்ந்து குரல் கொடுக்க வேண்டும் என்பது எங்களுடைய கோரிக்கை - என்றார்.

## மியன்மாரில் இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதிர்ச்சியையும் அதிருப்தியையும் இலங்கையின் தேர்தல்கள் ஆணைக்குழு வெளிப்படுத்தியுள்ளது.

அத்துடன் மியன்மாரில் அரசியல் தலைவர்களுடன் கைதுசெய்யப்பட்டுள்ள தேர்தல்கள் அதிகாரிகளை உடனடியாக விடுவிக்குமாறும் அந்நாட்டு இராணுவத்தை இலங்கையின் தேர்தல்கள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

அவர்களின் விடுதலைக்காக ஜனநாயகத்தின் மீது பற்றுக்கொண்ட அனைவரும் வேண்டுகோள் விடுக்குமாறும் குறித்த அறிக்கையில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சுதந்திர தினப் பாடம்

**தன்னுடைய உண்மை முகத்தை மீண்டும் ஒரு தடவை வெளிப்படையாகச் சுட்டிக் காட்டியிருக்கின்றார் ஜனாதிபதி.**

**பாம்பின் வாயிலிருந்து விஷத்தைத்தான் எதிர்பார்க்கலாம். பசுவின் பாலை அல்ல. மீண்டும் ஒரு தடவை விஷத்தைக் கக்கியிருக்கின்றது பாம்பு.**

***"நான் இந்த நாட்டின் சிங்கள – பௌத்த தலைவன். இதனைக் கூற நான் ஒரு போதும் தயங்கமாட்டேன். பௌத்த சித்தாந்தங்களுக்கு அமையவே நாட்டை ஆள்வேன்."*** **– என்று நாட்டின் 73 ஆவது சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொண்டு நாட்டு மக்களுக்குப் பிரதான உரை நிகழ்த்தியபோது கூறியிருக்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.**

**கோட்டாபய ராஜபக்ஷ, இன்றைய நிலையில் சிங்கள – பௌத்த தலைவர் என்பதிலோ, சிங்கள தேசத்தின் தலைவர் என்பதிலோ யாருக்கும் சந்தேகம் இல்லை.**

**இன்னும் குறிப்பாக – விசேடமாக – கூறுவதானால், அவர் சிங்கள, பௌத்த மக்களின் வாக்குகளால் மட்டுமே அதிகாரத்துக்கு வந்தவர். இந்த இலங்கைத் தீவில் வசிக்கும் பேரின சிங்கள, பௌத்தவர்கள் அல்லாத மக்களின் தெரிவும் அவர் அல்லர். தலைவரும் அவர் அல்லர்.**

**இதில் இரண்டு விடயங்கள் உள்ளன.**

**ஒன்று – நாட்டில் எண்ணிக்கையில் அதிகமான பௌத்த, சிங்களவர்களால் மட்டுமே தலைவரானவர் அவர். அதனை வைத்துக் கொண்டு சிறுபான்மை இனங்களின் தலைவராக அல்லாமல், அவர்கள் மீது அவர் தலைமைத்துவ ஆதிக்கம் செலுத்துகின்றார்.**

**அடுத்தது – சிறுபான்மையினரான வடக்கு, கிழக்குத் தமிழர்களின் தாயக இறைமையை சிங்கள தேசம் கபளீகரம் செய்து, ஆக்கிரமித்து வைத்திருக்கின்றமையால், அந்தச் சிங்கள தேசத்தின் தலைவராக இருந்து கொண்டு தமிழர் தாயகம் மீதும் அவர் வல்வந்தமான ஆளுகை செய்கின்றார்.**

**இந்த இரண்டின் அடிப்படையில் எழுந்த ஆணவப் பேச்சே இன்றைய உரையின் சாரம்சமாகும்.**

**இலங்கைத் தீவு இன்று கொண்டாடும் சுதந்திர தினத்தை, தீவின் வடக்கு, கிழக்குத் தாயகத் தமிழ் மக்கள் அந்நிய தேசத்தின் ஆக்கிரமிப்புப் பிடியைக் குறிக்கும் அடிமைத்துவ நாளாக – கரிநாளாக – அனுஷ்டிக்கின்றனர்.**

**தமிழர் தரப்பின் அந்த அடிமைத்துவத்தை வெளிப்படையாக உணர்த்தும் பேச்சே இலங்கை ஜனாதிபதியின் சுதந்திர தின உரையின் சாரமாக அமைந்தது.**

**பௌத்த – சிங்கள தர்பார்தான் இங்கு நடைபெறும். அதற்கு அடிமைப்பட்டு இந்த நாட்டில் இருப்பதானால் இருங்கள். இல்லையேல் ஒழியுங்கள் – என்பதுதான் இந்தத் தலைமைத்துவத்தின் பேரினவாத மேலாதிக்கப் பண்பியல்பு.**

**அந்த மேலாண்மைச் செருக்கை வார்த்தைக்கு வார்த்தை – வெவ்வேறு சொல்லாடல்களில் – பிரதிபலித்திருக்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவ்வளவே.**

**ஒரு வகையில் அவர் மெச்சப்பட வேண்டியவரே. தமது கொள்கை நிலைப்பாட்டை – தமது அடிமனதில் ஆழமாக ஊறிக் கிடக்கும் பேரினவாதப் பண்பியல்பை – அப்படியே அவர் வெளிப்படுத்தியிருக்கின்றார். சொல்லிலும் செயலிலும் நடிப்பின்றி, தமது உண்மைச் சொரூபத்தையே அவர் காட்டி நிற்கின்றார். இரட்டை வேடம் போடவில்லை.**

**இலங்கையின் ஆட்சிப் பீடம் குறித்து சர்வதேசம் எடை போடும் காலம் வந்துள்ளது. இலங்கையை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலிலும் பிற தளங்களிலும் சர்வதேசம் மீளக் கூடி ஆராய்ந்து தீர்மானிக்கும் வேளை வந்திருக்கின்றது.**

**இந்தச் சமயத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினதும் அவரது ஆட்சிப் பீடத்தினதும் உண்மை முகத்தைக் காட்டும் விதத்தில் இந்த சுதந்திர தின உரை அமைந்திருப்பது முக்கிய விடயம் அல்லவா?**

**இந்த இலங்கைத் தீவின் சிறுபான்மையினங்களின் தனித்துவங்கள் பேணப்படப் போவதில்லை. அவர்களின் மொழி, மதம், தாயகம், கலாசாரப் பண்பியல்புகள், வாழ்க்கை முறைமை போன்றவை பேரினவாத ஆக்கிரமிப்பில் செயலிழந்து சிதைந்து கொண்டிருக்கின்றன. அந்த சிதைவும், அழிவும் தொடரும் என்பதையே பௌத்தத்தின் அடிப்படையில் நாட்டை ஆள்வேன் என்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் உறுதிமொழி சந்தேகத்துக்கு அப்பால் தெளிவுபடுத்தி நிற்கின்றது.**

**இந்த நாட்டில் வாழும் சிறுபான்மையினருக்கு – தமிழர்கள், முஸ்லிம், மலையகத் தமிழர்கள் மற்றும் பிற சிறிய இனக் குழுக்களுக்கு – தமது சுதந்திர தின உரை மூலம் திட்டவட்டமானதும் தெளிவானதும் வெளிப்படையானதுமான நிலைப்பாட்டை அப்பட்டமாகத் தெரிவித்திருக்கின்றார் நாட்டின் ஜனாதிபதி.**

**இதனை வைத்துக் கொண்டு, அடுத்து நாம் என்ன செய்ய வேண்டும் என சிறுபான்மையினர் தீர்மானிக்க வேண்டும். அதனைத்தான் சிங்கள தேசத்தின் இந்த சுதந்திர தினத் தலைவர் உரை எமக்கு உணர்த்தி நிற்கின்றது.**

**இனியும் அந்தத் தலைமைத்துவத்தை அண்டி, நக்கிப் பிழைக்கப் போகின்றோமா? அல்லது நம் இனங்களின் காலாதிகால தனித்துவத்தைப் பேண ஒன்றுபட்டு காத்திரமாகச் செயற்படப் போகின்றோமா? தீர்மானம் எடுக்க வேண்டிய வேளை இதுதான்!**

# தோட்டத்தொழிலாளர் சம்பள உயர்வு விவகாரம் நுவரெலியா உட்பட சில இடங்கள் முடக்கம்!



## எதிர்வரும் 5 ஆம் திகதி ஏற்பாடு

தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1,000 ரூபாவாக தற்போதைய அரசாங்கம் நிர்ணயித்தாலும் பெருந்தோட்டக் கம்பனிகள் அதை அதிகரிக்கத் தயாராக இல்லை என்பதால், அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு எதிராக ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

எதிர்வரும் 5ஆம் திகதி நுவரெலியா மாவட்டம் உட்பட அநேக பிரதேசங்களில் இவ்வாறு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எனவே, அனைத்துக் கடைகளும் மூடப்படுவதுடன் ரக்ஸி, ஓட்டோக்கள் இயக்கப்படாது எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த ஹர்த்தால் பிரசாரம் அரசாங்கத்துக்கு எதிரானது அல்ல என்றும் பெருந்தோட்ட கம்பனிகளுக்கு எதிரானது எனவும் கூறப்பட்டுள்ளது.

# கொரோனாக் குணமடைவு 60 ஆயிரத்தைக் கடந்தது!

கொழும்பு, பெப்.04

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து பூரண குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 60 ஆயிரத்தை கடந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொரோனா தொற்றில் இருந்து மேலும் 684 பேர் பூரணமாக குணமடைந்து இன்று (வியாழக்கிழமை) வீடுகளுக்கு திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 60 ஆயிரத்து 567ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 332 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாணவர்களின் மன ஆரோக்கியத்துக்கு முன்னுரிமை வழங்கவேண்டும் - பீரிஸ்

குழந்தையின் ஆரம்ப ஆண்டுகளில் அவர்களின் மன ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துகின்றமை அவர்களின் வளர்ச்சிக்கு மிக முக்கியமாக அமையும் என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எனவே, மாணவர்கள் உணர்ச்சி ரீதியாக ஆரோக்கியமாகவும் இருக்க பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் இதனை ஒரு பாடமாகக் கற்பிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் நேற்று (புதன்கிழமை) கருத்து தெரிவித்த அவர் –

மன அழுத்தம் காரணமாக அதிக இறப்



புகள் உலகளவில் பதிவாகின்றமையை சுட்டிக் காட்டிய அவர், தியானம் போன்ற செயற்பாடுகளில் மாணவர்கள் ஈடுபட வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

# இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய நடவடிக்கைகளால் 2 கோடி ரூபா நட்டம்!

## நெடுந்தீவு மீனவர்கள் வேதனை

யாழ்ப்பாணம், பெப்.05

யாழ். நெடுந்தீவு கடல் பகுதியில் எல்லை தாண்டிய இந்திய மீனவர்களின் தொழில் நடவடிக்கைகளால் கடந்த நவம்பர் மாதம் மூன்று நாள்களில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் காரணமாக இரண்டு கோடியே 49 லட்சத்து 79 ஆயிரம் ரூபா நட்டம் ஏற்பட்டிருப்பதாக நெடுந்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு பகுதியில் 689 இற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் தமது வாழ்வாதாரத் தொழிலாகக் கடற்றொழிலை மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் கடந்த நவம்பர் மாதம் 16 ஆம், 18 ஆம், 21 ஆம் திகதிகளில் எல்லை தாண்டிய இந்திய இழுவைப் படகுகளின் தொழில் நடவடிக்கைகளால் 174 கடற்தொழிலாளர்கள் தங்களுடைய கடற்றொழில் உபகரணங்களை இழந்துள்ளனர்.

குறிப்பாக பல லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகள் மற்றும் கடற்றொழில் உபகரணங்களை அவர்கள் இழந்துள்ளனர். இதன் மொத்த மதிப்பீடு 2 கோடியே 49 லட்சத்து 79 ஆயிரம் ரூபா நட்டம் ஏற்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக இந்திய இழுவைப் படகுகளின் எல்லை தாண்டிய தொழில் நடவடிக்கைகளால் தமது தொழில்கள் தொடர்ந்தும் பாதிக்கப்படுகின்றன எனவும் உயிர் ஆபத்துக்களைக் கூட எதிர்கொள்ள வேண்டிய நிலை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ள அந்தப் பிரதேச கடற்தொழிலாளர்கள், தற்போது தொழில் உபகரணங்களை இழந்துள்ள நிலையில் நாளாந்தம் கூலி வேலைகளுக்காகச் செல்கின்ற நிலை ஏற்பட்டிருப்பதாகவும் கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச்சங்களின் சமாசத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது..

கடந்த முதலாம் திகதி நெடுந்தீவு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு தொழிலாளர்களுடைய பாதிப்பு தொடர்பில் உரையாற்றுகையிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, புரவி புயல் காரணமாகவும் நெடுந்தீவு பிரதேசத்தில் கடற்தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் எனவும் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. புரவி புயல் காரணமாக 10 படகுகள் முழுமையாக சேதமடைந்தமையுடன் 68 படகுகள் பகுதி அளவிலும் சேதமடைந்துள்ளன. மூன்று வலைகள் முழுமையாகவும் மூன்று வலைகள் பகுதி அளவிலும் சேதமடைந்துள்ளன.

வெளியிணைப்பு இயந்திரம் ஒன்று முழுமையாகவும் மூன்று இயந்திரங்கள் பகுதி அளவிலும், இரண்டு படகுகள் சேதம் அடைந்தும் ஆறுபடகுகள் பகுதியளவில் சேதமடைந்துமுள்ளன. 84 வலைகள் முழுமையாக சேதம் அடைந்து இருக்கின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தொழிலாளர்கள் தங்களுடைய தொழில் உபகரணங்களை இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் இழந்து தாங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு இருக்கின்றனர் எனவும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.





# இந்தியாவில் நீடிக்கும் விவசாயிகள் போராட்டம்; வெளிநாட்டு பிரபலங்கள் கண்டனம் தெரிவிப்பு!

இந்தியாவில் வேளாண் சட்டங்களுக்கு எதிராக விவசாயிகள் டெல்லி எல்லைப்பகுதிகளில் போராட்டம் நடத்தி வருகின்றனர். அப்பகுதியில் பொலிஸார் அதிக அளவில் குவிக்கப்பட்டுள்ளமையுடன் மிகப்பெரிய தடுப்பு அரண்களை ஏற்படுத்தியுள்ளனர். அதோடு அல்லாமல் இணைய சேவை, மின்சாரம், கழிப்பிட வசதி போன்ற தடை செய்துள்ளன.

விவசாயிகளின் போராட்டத்திற்கு வெளிநாட்டு பிரபலங்கள் ஆதரவான கருத்து தெரிவித்து வருகின்றனர். இதற்கு வெளியுறவுத்துறை அமைச்சகம் கண்டனம் தெரிவித்துள்ளது. பா.ஜனதா தலைவர்களும், உள்துறை அமைச்சர் அமித் ஷாவும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

உள்நாட்டு விவகாரங்களில் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் பார்வையாளர்களாக இருக்கலாம், பங்கேற்க முடியாது என கிரிக்கெட் பிரபலம் சச்சின் கூறி உள்ளார்.

இதேபோன்று பல்வேறு திரை பிரபலங்களும், விளையாட்டு துறையினரும், வெளிநாட்டு பிரபலங்களின் தலையீட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

## இந்திய விவசாயிகளின் போராட்டம்; அமெ. வெளியுறவுத்துறை கருத்து

இந்தியாவில் நடக்கும் விவசாயிகளின் போராட்டம் குறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை தனது கருத்தை வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் கூறியதாவது:-

அமைதியான முறையில் நடைபெறும் போராட்டங்களை, வளரும் ஜனநாயகத்தின் அடையாளமாக நாங்கள் அங்கீகரிக்கிறோம். இந்திய உச்ச நீதிமன்றமும் இதையே கூறி உள்ளது.

இருதரப்பு பேச்சுமூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும். இந்தியாவின் சந்தைகளின் செயற்திறனை மேம்படுத்துவதற்கும், தனியார் முதலீட்டை ஈர்க்கும் நடவடிக்கைகளையும் அமெரிக்கா வரவேற்கிறது.

இணையதளஉட்படதகவல் தொடர்புகள் தடையின்றி கிடைப்பது கருத்துச் சுதந்திரத்திற்கு அடிப்படையானது மற்றும் வளர்ந்து வரும் ஜனநாயகத்தின் ஒரு அடையாளமாகும்.

-இவ்வாறு அவர் கூறினார்.

## விவசாயிகள் போராட்டம்:

# சர்ச்சை பதிவுகளை நீக்காவிட்டால் சட்ட ரீதியான நடவழக்கை எடுக்கப்படும்

## டுவிட்டருக்கு இந்திய அரசு கண்டனம்

விவசாயிகள் போராட்டம் தொடர்பில் சர்ச்சை பதிவுகளை நீக்காவிட்டால் சிறைத் தண்டனை அல்லது அபராதம் விதிக்கப்படும் என்று டுவிட்டர் நிறுவனத்துக்கு மத்திய அரசு எச்சரிக்கை விடுத்து உள்ளது.

டெல்லியில் நடந்து வரும் விவசாயிகள் போராட்டம் குறித்து பல்வேறு தரப்பினரும் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். டுவிட்டரில் modi planning farmers genocide என்ற ஹெஸ்டேக்கில் நெட்டிசன்கள் பதிவிட்டு வருகின்றனர் .

இந்த நிலையில் சர்ச்சைப் பதிவுகளை நீக்காவிட்டால் சட்டரீதியிலான தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று டுவிட்டர் நிறுவனத்திற்கு மத்திய அரசு எச்சரிக்கை விடுத்து உள்ளது.

# டெல்லி விவசாயிகள் போராட்டம்; பொப் பாடகி ரிஹானா ஆதரவு



டெல்லியில் விவசாயிகள் நடத்தி வரும் போராட்டத்திற்கு அமெரிக்க பாப் பாடகி ரிஹானா ஆதரவு தெரிவித்துள்ளளார்.

டெல்லியை சுற்றியுள்ள பகுதிகளில் இணைய சேவை துண்டிக்கப்படுவதாக வெளியான செய்தி ஒன்றை தனது டுவிட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ள அமெரிக்க பாப் பாடகி ரிஹானா, இது குறித்து ஏன் நாம் பேசவில்லை? என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

**why aren't we talking about this?! FarmersProtest https://t.co/obmIlXhK9S**
**‡ Rihanna (rihanna) February 2, 2021**

# ரிஹானாவின் கருத்துக்கு லதா மங்கேஷ்கர் பதிலடி



பொப் பாடகி ரிஹானா விவசாயிகள் போராட்டம் குறித்த கருத்துக்கு இந்தியாவின் மூத்த பாடகியான லதா மங்கேஷ்கர் பதிலடி கொடுத்துள்ளார்.

தமது டுவிட்டர் பதிவில் உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கு வெளிநாட்டவர்கள் தலையிடக் கூடாது என்றும் இந்தியா தனது உள்நாட்டுப் பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக் கொள்ளும் ஆற்றல் பெற்றுள்ளது என்றும் லதா மங்கேஷ்கர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே பாலிவுட்டின் பிரபல நட்சத்திரங்கள் அக்சய் குமார், அஜய் தேவகன், அனுபம் கெர் உள்ளிட்ட பலரும் ரிஹானாவின் கருத்துக்கு எதிராகவும் மத்திய அரசுக்கு ஆதரவாகவும் டுவிட்டர் பதிவுகளை வெளியிட்டுள்ளனர்.

# ஆளுநரின் முடிவு என்னவென்று தெரியவில்லை பேரறிவாளன் வழக்கு மாசி 9 இல் விசாரணை



முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலைவழக்கில் தண்டனை பெற்று சிறையில் உள்ள பேரறிவாளன் உள்ளிட்ட 7 தமிழர்களை விடுதலை செய்வது தொடர்பாக தமிழக அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றி ஆளுநருக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. 2 ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் ஆளுநர் இந்த பரிந்துரை மீது முடிவு எடுக்கவில்லை.

இதற்கிடையே, பேரறிவாளன் தனது தண்டனையை நிறுத்தி வைத்து விடுவிக்கக்கோரி உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். இந்த மனுவை நீதிபதி நாகேஸ்வர ராவ் தலைமையிலான அமர்வு விசாரித்து வருகிறது.

இந்த வழக்கு விசாரணையின் போது, பேரறிவாளனை விடுதலை செய்யும் அதிகாரம் ஜனாதிபதிக்கு மட்டுமே உள்ளது என மத்திய அரசு முதலில் வாதிட்டது. பின்னர், மத்திய அரசு தனது நிலைப்பாட்டை மாற்றியது, தமிழக ஆளுநர் 3 அல்லது 4 நாட்களில் முடிவு எடுப்பார் என மத்திய அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து பேறறிவாளன் விடுதலை தொடர்பான பரிந்துரை மீது ஆளுநர் ஒரு வாரத்திற்குள் முடிவு எடுக்க வேண்டும் என நீதிபதிகள் அவகாசம் வழங்கி, விசாரணையை ஒத்திவைத்தனர்.

ஆனால், உச்ச நீதிமன்றம் ஆணையிட்டு 12 நாள்களாகியும் தமிழக அரசின் பரிந்துரை குறித்து ஆளுநர் இன்று வரை எந்த முடிவும் எடுக்கவில்லை. ஆளுநரின் முடிவு என்ன என்றே தெரியாத நிலை உள்ளது.

ஆளுநரின் முடிவு தொடர்பாக எந்த தகவலும் வெளியாகாத நிலையில், பேரறிவாளன் வழக்கை பெப்ரவரி 9 ஆம் திகதி உச்ச நீதிமன்றம் விசாரிக்க உள்ளது. அப்போது ஆளுநரின் முடிவு குறித்து அறிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பாக். இராணுவ தாக்குதலில் இந்திய வீரர் பலி

ஜம்மு – காஷ்மீரின் எல்லைப்பகுதிகளில் பாகிஸ்தான் இராணுவம் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி தொடர்ந்து அத்துமீறலில் ஈடுபட்டு வருகிறது. இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந்திய இராணுவமும் தாக்குதல் நடத்துகிறது. இதில் இரு தரப்பிலும் பாதிப்புகள் ஏற்படுகின்றன.

இந்நிலையில், ரஜோரி மாவட்டம் சுந்தர்பானி எல்லையில் நேற்று இந்திய நிலைகளை குறிவைத்து பாகிஸ்தான் ராணுவம் தாக்குதல் நடத்தியது. இந்திய இராணுவ வீரர்களும் பதிலடி கொடுத்தனர். பாகிஸ்தான் நடத்திய தாக்குதலில் பலத்த காயமடைந்த இந்திய வீரர் லட்சுமணன் உயிரிழந்தார்.

இந்த சண்டை யைத் தொடர்ந்து எல்லையில் பதற்றம் உரு வாகியமையை தொடர்ந்து இந்திய இராணுவம் கண்காணிப்பை தீவிரப்படுத்தியுள்ளது.

# பெங்களூரு சிறையிலிருந்து இளவரசி நாளை விடுதலை

சொத்துக்குவிப்பு வழக்கில் சசிகலா உள்ளிட்ட 3 பேர் மீதான தீர்ப்பை உறுதி செய்ததையடுத்து கடந்த 2017 ஆம்ஆண்டு பெப்ரவரி 15 ஆம் திகதி பெங்களூரு பரப்பன அக்ரஹாரா சிறையில் சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகிய 3 பேரும் அடைக்கப்பட்டனர். தண்டனை காலம் முடிவடைந்தமையை தொடர்ந்து சசிகலா கடந்த 27 ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டார். முன்னதாக அவருக்கு கொரோனாப் பாதிப்பு ஏற்பட்டதால் பெங்களூரு விக்டோரியா அரசு மருத்துவமனையில் சிகிச்சைபெற்றார்.

விடுதலைக்கு பின்னர் சிகிச்சை முடிந்து சசிகலா ஒருவாரம் தனிமைப்படுத்தப்பட்டு தனியார் சொகுசு விடுதியில் ஓய்வு எடுத்து வருகிறார். சசிகலாவின் உறவினரான இளவரசியின் தண்டனைக் காலம் நாளை (வெள்ளிக்கிழமை) முடிவடைகிறது.

முன்னதாக இளவரசிக்கும் கொரோனா தொற்று உறுதியானது. அவரும் விக்டோரியா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். சிகிச்சைக்கு பின்னர் குணம் அடைந்த இளவரசி நேற்று முன்தினம் மீண்டும் சிறையில் மாற்றப்பட்டார். இதையடுத்து தண்டனை காலம் முடிவடைவதால் இளவரசி நாளை காலை 10.30 மணிக்கு சிறையில் இருந்து விடுதலை செய்யப்படுகிறார். சிறை அதிகாரிகள் உரிய ஆவணங்களில் கையெழுத்து பெற்று அவரை விடு விக்கின்றனர். தொடர்ந்து இளவரசியிடம் அவரது உடமைகள் ஒப்படைக்கப்படுகின்றன. விடுதலை ஆனதும் இளவரசி சசிகலா ஓய்வெடுக்கும் விடுதிக்குச் செல்கிறார்.

அங்கிருந்து 7 ஆம் திகதி சசிகலாவுடன் சேர்ந்து சென்னை திரும்ப உள்ளதாக அவரது உறவினர்கள் தெரிவித்தனர். இந்த வழக்கில் சுதாகரன் இன்னும் அபராத தொகை செலுத்தவில்லை. இதனால் சுதாகரன் விடுதலை தொடர்ந்து தாமதமாகி வருகிறது.

# உலகிலேயே முதன்முறையாக வெற்றிகரமாக நடந்த இரு கைகள் மற்றும் முக மாற்று அறுவை சிகிச்சை

கார் விபத்தில் பயங்கரமாக காயமடைந்த அமெரிக்க இளைஞர் ஒருவருக்கு உலகிலேயே முதன்முறையாக இரண்டு கைகள் மற்றும் முக மாற்று அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் நியூஜெர்சி மாகாணத்தைச் சேர்ந்த 22 வயது இளைஞர் ஜோ டிமியோ. கடந்த 2018 ஆம் ஆண்டு வேலை முடிந்து வீட்டிற்கு வாகனம் செலுத்திக் கொண்டு வரும்போது சிறிது நேர கண் அயர்ச்சியால் அவரது கார் கவிழ்ந்து வெடித்தது. இதில் அவரது விரல்கள் துண்டானதுடன், முகத்தில் பலத்த காயம் ஏற்பட்டு உதடுகள், கண் இமைகள் உட்பட உடலில் 80 சதவீதத்திற்கும் அதிகமான பகுதிகள் முழுமையாக எரிந்து விட்டன.

அதனைத் தொடர்ந்து நான்கு மாதங்கள் நியூஜெர்சியில் உள்ள ஹிக்ஷுஷீ லங்கோன் மருத்துவ மையத்தில் தீவிர சிகிச்சை பிரிவில் ஜோ டிமியோ சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு தொடர்ந்து உயிர் காக்கும் சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வந்தன. மேலும் கிட்டத்தட்ட இரண்டரை மாதங்கள் கோமாவில் இருந்தார்.

இந்த நிலையில் . ஜோ டிமியோவுக்கு கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23 மணி நேரம் முக மாற்று – கைகள் மாற்று அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடந்தது. இந்த சாதனையை முகம் மாற்றுத் திட்டத்தின் இயக்குநர் அறுவை சிகிச்சை நிபுணர் எட்வர்டோ ரோட்ரிக்ஸ் என்பவர் தலைமையில் 96 பேர் அடங்கிய மருத்துவ குழுவினர் செய்து முடித்தனர்.

இது குறித்து ஜோ டிமியோ கூறுகையில், சுரங் கப்பாதையின் முடிவில் வெளிச்சம் கிடைப்பதை போல



சிகிச்சையின் முடிவிலும் நல்ல பலன் கிடைக்கும் என்று நம்பியதாகவும், வெற்றிகரமாக செய்யப்பட்ட அறுவை சிகிச்சையால் தனக்கு இப்போது மறு வாழ்க்கை கிடைத்ததாகவும், குறிப்பிட்டார். ஜோ டிமியோ சிகிச்சைக்கு முழு நம்பிக்கையுடன் ஒத்துழைப்பு கொடுத்ததால் இது சாத்தியமானது என்று முகமாற்று அறுவை சிகிச்சை நிபுணர் எட்வர்டோ ரோட்ரிக்ஸ் கூறினார்.

ஒரே நேரத்தில் இரண்டு கைகள் மற்றும் முக மாற்று அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது உலகில் இதுவே முதன்முறையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# இறக்குமதி முறைகேடு வழக்கில் ஆங் சான் சூகியை 14 நாள்கள் காவலில் வைக்க நீதிமன்று உத்தரவு

மியன்மார் அரசுக்கும் அந்த நாட்டு இராணுவத்துக்கும் இடையே மோதல் போக்கு நீடித்து வந்த நிலையில், நேற்று முன்தினம் இராணுவம் அதிரடியாக ஆட்சியை கைப்பற்றியது.நாட்டின் தலைவர் ஆங் சான் சூகி, அதிபர் வின் மைன்ட் உட்பட முக்கிய அரசியல் தலைவர்கள் மற்றும் மூத்த அரசு அதிகாரிகளை ராணுவம் கைது செய்து சிறை வைத்துள்ளது.

அடுத்த ஒரு வருடத்துக்கு நாட்டில் இராணுவ ஆட்சி நடைபெறும் என்றும் அதன் பிறகு தேர்தல் நடத்தப்பட்டு வெற்றியாளரிடம் அதிகாரம் ஒப்படைக்கப்படும் என்றும் இராணுவம் அறிவித்துள்ளது. மேலும் ஆங் சான் சூகி மீது இறக்குமதி முறைகேடு குற்றச்சாட்டு பதிவு செய்யப் பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதுகுறித்து தேசிய ஜனநாயகக் கட்சி செய்தித் தொடர்பாளர் வெளி யிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது;-

தனது பதவிக் காலத்தில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி விதிமுறைகளை ஆங் சான் சூகி மீறியதாக அவா மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இதையடுத்து, அவரை வரும் 15 ஆம் திகதி வரை 14 நாள் காவலில் வைத்திருக்க தகினாத்திரி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேலும் தேசிய பேரிடா மேலாண்மை சட்டத்தை மீறினார் என அதிபர் மியின்ட் மீதும் முறைகேடு குற்றச்சாட்டு பதிவு



செய்யப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே ஆங் சான் சூகியின் இல்லத்தில் சோதனை நடத்திய இராணுவக் குழு, அங்கிருந்து 10 'வாக்கி டாக்கி' கருவிகளையும், வேறு சில தகவல் தொடர்பு சாதனங்களையும் பறிமுதல் செய்ததாக கூறப் படுகிறது. அந்த சாதனங்களை உரிய அனுமதியின்றி ஆங் சாங் சூகி இறக்குமதி செய்துள்ளதாக குற்றம் சாட் டப்பட்டுள்ள நிலையில், இறக்குமதி முறைகேடு வழக்கில் இதனை ஆதாரமாகப் பயன்படுத்த அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

# பிரேஸிலில் கொரோனாவின் 2 ஆவது அலை கட்டில் வசதியின்றி தவிக்கும் வைத்தியசாலைகள்

பிரேஸிலில் கொரோனா வைரஸின் 2 ஆவது அலை வேகமாகப் பரவி வரும் நிலையில், கொரோனா நோயா ளிகளை வேறு வைத்தியசாலைகளிக்கு மாற் றும் பணியில் விமானப்படையின் விமானங்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

மனாஸ் நகரில் வேகமாகப் பரவி வரும் உருமாறிய கொரோனா காரணமாக, வைத்தியசாலைகளில் கட் டில்கள் நிரம்பி வழிகின்றன.

ஆக்சிஜன் சிலிண்டர் தட் டுப்பாடு ஏற்பட்டுள்ளமை யால், உயிரிழப்புக்களை தடுக்கும் விதமாக அங்கு வரும் நோயாளிகளை வேறு பகுதிக்கு மாற்றும் பணி கள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

# முகப்புத்தக சேவைகளுக்கு மியன்மாரில் இடைக்காலத்தடை விதித்து உத்தரவு

தென்கிழக்கு ஆசிய நாடான மியன்மாரில் கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் பொதுத்தேர்தல் நடைபெற்றது. இதில் அந்த நாட்டின் தலைவர் ஆங் சான் சூகி தலைமையிலான ஆளும் தேசிய ஜனநா யக கட்சி மீண்டும் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

ஆனால் அந்த நாட்டு இராணுவம் தேர்தலில் பெரிய அள வில் முறைகேடுகள் நடந்ததாக குற்றஞ்சாட்டியமையோடு, தேர்தல் முடிவுகளை ஏற்கவும் மறுத்தது. ஆனால் இராணுவத் தின் குற்றச்சாட்டு அடிப்படை ஆதாரமற்றவை என கூறி தேர்



தல் ஆணையம் அதை நிராகரித்தது.

இந்த விவகாரத் தில் மியன்மார் அரசுக் கும் அந்த நாட்டு இரா ணுவத்துக்கும் இடையே மோதல் போக்கு நீடித்து வந்த நிலையில், நேற்று முன்தினம் இராணு வம் அதிரடியாக ஆட்சியை கைப்பற்றியது. நாட்டின் தலைவர் ஆங் சான் சூகி, அதிபர் வின் மைன்ட் உட்பட முக்கிய அரசியல் தலைவர்கள் மற்றும் மூத்த அரசு அதிகாரிகளை இராணுவம் கைது செய்து சிறை வைத்துள்ளது.

அடுத்த ஒரு வருடத்துக்கு நாட்டில் இராணுவ ஆட்சி நடை பெறும் என்றும் அதன் பின்பு தேர்தல் நடத்தப்பட்டு வெற் றியாளரிடம் அதிகாரம் ஒப்படைக்கப்படும் என்றும் இராணுவம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் மியன்மாரில் இணையத்தள சேவைகளுக்கு இடைக்காலத்தடை விதித்து உத்தரவிடப்பட்டுள்ளது. இதன்படி மியன்மாரில் அரசுக்கு சொந்தமான தொலைத் தொடர்பு எம்.பி.டி. உட்பட இணையதள சேவை வழங்குநர்களால், முகப்புத்தகம் சேவைகள் தடை செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக கருத்து தெரிவித்துள்ள அந்நாட்டு தகவல் தொடர்பு அமைச்சகம் நாட்டின் ஸ்திரத்தன்மையை பேணு வதற்காக பெப்ரவரி 7 ஆம் திகதி வரை முகப்புத்தகம் தடை செய்யப்படும் என்று தெரிவித்திருந்தது.

மேலும் நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் மக்கள், போலிச் செய்திகள் மற்றும் தவறான தகவல்களை பரப்புகிறார்கள் என்றும், முகப்புத்தகத்தைப் பயன்படுத்து வதன் மூலம் மக்கள் மத்தியில் தவறான புரிதல் ஏற் படுத்தப்படுவதாவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சில நாடுகளிலிருந்து சவுதிக்கு செல்ல தடை; கொரோனா முன்னெச்சரிக்கை நடவடிக்கை



கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த ஒவ்வொரு நாடும் தனித் தனியாக நெறிமுறைகள், பயணக் கட்டுப்பாடுகளை விதித்துள்ளன. வழக்கமான விமான போக்குவரத்துகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. சூழ் நிலைக்கு ஏற்ப, சில நாடுகள் இடையே இருதரப்பு ஒப்பந்த அடிப்படையிலான விமானங்கள் இயக் கப்படுகின்றன. அதற்கும் பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், கொரோனா தொற்றுநோய் பரவலை கட்டுப் படுத்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, சவுதி அரேபிய அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கையை எடுத்துள்ளது. அதாவது 20 நாடுகளில் இருந்து வருபவர்களுக்கு தற்காலிகமாக தடை விதிக்கப்பட்டுள்ளது. நேற்று புதன்கிழமை முதல் இந்த தடை உத்தரவு நடைமுறைக்கு வந்துள்ளது. தூதரக அதிகாரிகள், சவுதி குடிமக்கள் மருத்துவ பணியாளர்களுக்கு இந்தத் தடையில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

தடை செய்யப்பட்ட நாடுகள் ஐக்கிய அரபு அமீரகம், எகிப்து, லெபனான், துருக்கி, அமெரிக்கா, சுவீடன், பிரேஸில், பிரிட்டன், ஜேர்மனி, பிரான்ஸ், சுவிட்ஸர்லாந்து, ஆர்ஜென்டினா, இத்தாலி, அயர்லாந்து, போர்த்துக்கல், தென்னாபிரிக்கா, இந்தியா, இந்தோனேசியா, பாகிஸ்தான், ஜப்பான்.

சவுதி அரேபியாவில் இதுவரை 3 லட்சத்து 68 ஆயிரத்து 639 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், 6 ஆயிரத்து 383 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மியன்மாரில் ராணுவ ஆட்சிக்கு எதிராக மருத்துவப் பணியாளர்கள் போராட்டம்

மியான்மரில் ஜனநாயக அரசை கவிழ்த்து விட்டு, சதி மூலம் ஆட்சியை பிடித்துள்ள இராணுவத்திற்கு எதிராக மருத்துவ பணியாளர்கள் ஒத்துழையாமை போராட் டம் நடத்துகின்றனர்.

எதிர்ப்பைகாட்ட சிவப்பு ரிப்பன்களை அணிந்து போராட்டம் நடத்தும் அவர்கள் இராணுவ அரசிற்காக வேலை பார்க்க மாட் டோம் என்ற முழக்கத்தை எழுப்பி வருகின்றனர்.

போதிய மருத்துவ கட் டமைப்பு வசதிகளுக்கு பற்றாக்குறை உள்ளதால், மியன்மாரில் கொரோனாவை கட்டுப்படுத்துவது பெரிய சவாலாக உள்ளது.

இந்த நிலையில், மருத் துவர்களும், மருத்துவ பணியாளர்களும் நடத்தும் போராட்டத்தால்கொரோனா கட்டுப்பாடு மேலும் சீர் குலையும்எனகூறப்படுகிறது.

இவர்களில் சிலர் முழு வேலைநிறுத்தத்தில் ஈடு பட்டாலும், பலர் சிவப்பு ரிப்பன்களை அணிந்து அரசு மருத்துவமனைகளில் மட்டும் வேலைக்கு செல் கின்றனர்.

**காணி, கடை விற்பனைக்கு**

1. தெல்லிப்பளையில் மாடிக்கடை விற்பனைக்குண்டு.
2. உடுப்பிட்டியில் மாடிக்கடை விற்பனைக்குண்டு.
3. கடைகள், வீடுகள் வாடகைக்குண்டு.
4. முல்லைத்தீவு மாவட்டத்தில் குமிள முலையில் 2 ஏக்கர் காணி வியா பாரப் பதிவுடன் விற்பனைக்குண்டு.

வியாபாரப் பதிவு மாற்றித்தரப்படும்.

**அலுவலகம்:-**
குஞ்சர்கடை அருகாமை,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை.

**தொடர்புகளுக்கு: 0773434415 0778578528**

# 13 ஆம் திருத்தத்தை முழுமையாக செயற்படுத்துவதை விரும்புகிறோம்!

## இந்தியா வலியுறுத்தல்



13 ஆவது அரசமைப்பு திருத்தம் மற்றும் மாகாண சபைகளை முழுமையாக அமுல்படுத்துவதன் மூலம் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு தொடர்பாக இந்தியாவின் நீண்டகால மற்றும் கொள்கை ரீதியான நிலைப்பாட்டை மீண்டும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என இலங்கைக்கான இந்திய பிரதி உயர் ஸ்தானிகர் வினோத் கே ஜாகோப் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான பிரதி இந்திய உயர் ஸ்தானிகர் வினோத் கே ஜாகோப் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

இதன் போது பிரதி உயர் ஸ்தானிகர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பு தொடர்பில் இலங்கையிலுள்ள இந்திய உயர் தூதரகம் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

ஆரம்பத்திலேயே இலங்கைக்கு இந்தியா தடுப்பூசிகளை வழங்கியமையை வரவேற்பதாக இந்த சந்திப்பின் போது ரவூப் ஹக்கீம் கூறினார். பொருளாதாரம், நிதி மற்றும் அபிவிருத்தி ஒத்துழைப்பு தொடர்பில் இரு தரப்பு கலந்துரையாடல் இதன் போது இடம்பெற்றது.

அண்மைக்காலமாக முஸ்லிம் சமூகத்தினர் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஹக்கீம் கலந்துரையாடலின் போது தெரிவித்தார்.

அத்தோடு இம்மாத இறுதியில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத்தொடர் பற்றியும் அவர் கருத்துக்களைத் தெரிவித்தார்.

2019 நவம்பர் வரை இலங்கை - இந்தியாவுக்குகிடையிலான தொடர்பாடல்கள் தொடர்பாக இதன் போது பிரதி உயர் ஸ்தானிகர் நினைவு கூர்ந்தார். 2020 செப்ரெம்பரில் இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஆகியோருக்கிடையில் நடைபெற்ற மெய்நிகர் மாநாட்டின் போது , 'இலங்கையில் அனைத்து இன மக்களின் எதிர்பார்ப்புக்களையும் இலங்கை உணர்ந்து செயற்படும்.'-என்று உறுதியளித்திருந்ததையும் இதன் போது பிரதி உயர் ஸ்தானிகர் குறிப்பிட்டார்.

13 ஆவது அரசமைப்பு திருத்தம் மற்றும் மாகாண சபைகளை முழுமையாக அமுல்படுத்துவதன் மூலம் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு தொடர்பாக இந்தியாவின் நீண்டகால மற்றும் கொள்கை ரீதியான நிலைப்பாட்டை பிரதி உயர் ஸ்தானிகர் மீண்டும் வலியுறுத்தினார்.

## ஷானி அபயசேகர உள்ளிட்ட மூவருக்கும் விளக்கமறியல்



குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர உள்ளிட்ட 03 சந்தேகநபர்களும் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கம்பஹா நீதிமன்றில் நேற்று (புதன்கிழமை) வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே விளக்கமறியல் நீடிப்பு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

பொய் சாட்சியத்தை உருவாக்கி, நீதிமன்ற புறக்கணிப்பில் ஈடுபட்டமை அடங்கலாக சில குற்றச்சாட்டுகளின் கீழ் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 21, 147 பேருக்கு நேற்று தடுப்பூசி!

இந்திய அரசாங்கத்தின் வெக்சின்மைத்ரி திட்டத்தின் கீழ் இலங்கைக்கு வழங்கப்பட்ட ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராசெனிகா கொவிட் தடுப்பூசி வழங்கும் செயற்திட்டம் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமானது.

இந்நிலையில், ஒரு லட்சத்துக்கும் அதிகமான முன்னிலை சுகாதார ஊழியர்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அதற்கமைய ஜனவரி 29 ஆம் திகதி 5 ஆயிரத்து 286 பேருக்கும், 30 ஆம் திகதி 32 ஆயிரத்து 825 பேருக்கும், 31 ஆம் திகதி 21 ஆயிரத்து 329 பேருக்கும், பெப்ரவரி முதலாம் திகதி 36 ஆயிரத்து 396 பேருக்கும் 2 ஆம் திகதி 23 ஆயிரத்து 217 பேருக்கும், நேற்று 21 ஆயிரத்து 147 பேருக்கும் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

அத்துடன், இதுவரை மொத்தமாக ஒரு லட்சத்து 40 ஆயிரத்து 200 பேருக்கு கொரோனாத் தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## சட்டவிரோதமாக வெட்டும் மாட்டுக் கழிவுகள் வவுனியாவில் வீதிகளில் கொட்டப்படுகின்றன!



வவுனியா பட்டாணிச்சூர் பகுதிகளில் சிலர் சட்ட விரோதமான முறையில் திருட்டு மாடுகள் வெட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றமையுடன், அதன் கழிவுகள் பட்டக்காடு குளத்திற்கு அருகில் வீசப்பட்டு வருகின்றன.

இதனால் அந்தப் பகுதியைச் சூழவுள்ள பகுதிகளில் துர்நாற்றம் வீசிவருகின்றது. அருகில் வசிப்பவர்கள் உட்பட வீதியால் செல்பவர்கள் எனப்பலரும் பல்வேறு அசௌகரியத்திற்குட்பட்டுள்ளனர் எனவும் இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் சமூக ஆர்வலர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் -

வவுனியா பட்டாணிச்சூர் பகுதிகளில் சிலர் சட்ட விரோதமான முறையில் திருட்டு மாடுகள் வெட்டும் நடவடிக்கைகளில் நீண்டகாலமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பாக நகரசபையினருக்கு பல்வேறு முறைப்பாடுகள் வழங்கப்பட்டும் எவ்விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கையையும் அவர்கள் முன்னெடுக்கவில்லை . அந்தச் செயற்பாடுகள் தடுத்து நிறுத்தப்படவில்லை. இவ்வாறு திருட்டுத்தனமாக வெட்டப்படும் சட்டவிரோதமான மாடுகளின் எச்சங்கள் மற்றும் கழிவுகள் அனைத்தும் உரைப்பையில் போடப்பட்டு பட்டக்காடு குளக்கட்டில் வீசப்பட்டு வருகின்றன .

இதனால் அந்த வீதியால் பயணிப்பவர்கள், அயலில் வசித்து வருபவர்கள் எனப்பல்வேறு தரப்பினரும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் . அத்துடன் இவ்வாறு வீசப்பட்டுவரும் கழிவுகளைக் கால்நடைகள் மற்றும் பறவைகளால் வீதிகளில் ஆங்காங்கே இழுத்துவிடப்படுவதால் துர்நாற்றம் வீசிவருகின்றதுடன் பட்டக்காடு குளம் மாசடைந்துள்ளது.

எனவே, இந்த நடவடிக்கையைக் கட்டுப்படுத்தி சட்டவிரோதமாக வெட்டப்படும் மாடுகளை தடுத்து நிறுத்துவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு மேலும் தெரிவித்துள்ளனர்.

## டிப்பர் விபத்தில் சிக்கிய நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு!

மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவலடி பகுதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் சென்ற நபர் மீது டிப்பர் வாகனம் மோதியதில் பலத்த காயங்களுடன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தவர் சிகிச்சை பலனின்றி கடந்த செவ்வாய்க்கிழமை உயிரிழந்தார்.

மேற்படி விபத்தில் சிகிச்சை பெற்று வந்த வாழைச்சேனை ஜும்ஆப் பள்ளி குறுக்கு வீதியைச் சேர்ந்த 55 வயதுடைய அப்துல் சலாம் என்பவரே இவ்வாறு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மரணமடைந்த நபருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பி.சி.ஆர். முடிவு கிடைத்தவுடன் உடலை வைத்தியசாலை நிர்வாகம் ஒப்படைக்கும் என்றும் குடும்பத்தினர் தெரிவித்தனர்.




## இலங்கையரை நாட்டுக்கு அழைப்பதை துரிதப்படுத்துவதற்குத் தீர்மானம் - பிரதமர்



நாட்டுக்குத் திரும்ப எதிர்பார்த்துள்ள வெளிநாட்டில் பணிபுரிபவர்களை நாட்டுக்கு அழைத்துவரும் நடவடிக்கையை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமைய துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வெளிநாட்டு தொழில்வாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரத்னவால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைய வெளிநாட்டில் பணிபுரிபவர்களை நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டில் பணிபுரியும் ஏராளமான இலங்கையர்கள் நாட்டுக்குத் திரும்ப முடியாது பாதிக்கப்பட்டுள்ளனர் என இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன தெரிவித்தார்.

அதற்கமைய கொவிட் -19 தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான ஜனாதிபதி செயலணியுடன் கலந்துரையாடி வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பிரதமர் நம்பிக்கை வெளியிட்டார்.

இதுவரை வெளிநாட்டில் பணிபுரியும் 32 ஆயிரம் இலங்கையர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளமையுடன், மேலும் 22 ஆயிரத்து 483 பேர் தாய்நாட்டுக்கு திரும்ப எதிர்பார்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.02.2021இல் வெளியிடப்பெற்றது.